DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**STC.No.186/2020**

**2026-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 04- ம் நாள் புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.3 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 3 | தொழில் | - | கறிக்கடை |
| பெயர் | - | வெள்ளைச்சாமி | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | ஜெயராஜ் | சமயம் | - | |
| கிராமம் | - | வால்பாறை புதுமார்க்கெட் | வயது | - | 48/2026 |
| சாதி | - | | | | |

**<u>04-02-2026</u>**

**( எதிரி ஆஜர்)**

(எதிரி தரப்பில் தாக்கல் செய்ய குவிமுச பிரிவு 311-ன் கீழான மனு EcrImp No.888/2025 -ல் அனுமதிக்கப்பட்டு சாட்சி திரும்ப அழைத்து குறுக்குவிசாரணை செய்யப்பட்டார்)

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

நான் எத்தனை வருடங்களாக கறிக்கடை நடத்தி வருகிறேன் என்றால் 2007-ம் வருடத்திலிருந்து நடத்தி வருகிறேன். கறிக்கடை எனது சொந்தக்கடையா என்றால் வாடகைகடை. நான் கறிக்கடை வைத்திருக்கும் வரிசையில் எத்தனை கறிக்கடை உள்ளது என்றால் 5 கடைகள் உள்ளது. அந்த 5 கடைகளிலும் யார் யார் வைத்திருப்பது என்றால் 1 மற்றும் 5-ம் நம்பர் கடை பொன்கணேஷ் என்பவர் பெயரிலும், 2-ம் நம்பர் கடை ஸ்டேன்மோர் வர்க்கீஸ் என்பவர் பெயரிலும், 3-ம் நம்பர் கடை பொள்ளாச்சி சுப்பிரமணிஎன்பவர் பெயரிலும், 4-ம் நம்பர் கடை ராமசாமி என்பவர் பெயரிலும் 2007-2020, 2021 வரை இருந்தது.இந்த 5 கடைகளிலும் அந்தஅந்த பெயரில் இருப்பவர்கள் கடை நடத்தாமல் உள்வாடகைக்கு கொடுத்து கடை நடத்தி வந்தார்கள் என்றால் சரியல்ல. பொன்கணேஷ் என்பவர் பெயரில் உள்ள கடைகளில் நானும் பொன்கணேஷ்சும் கூட்டாக நடத்தி வந்தோம். 23-02-2020-ம் தேதி நான் எத்தனை மணிக்கு காவல் நிலையம் சென்றேன் என்றால் 06.30 மணிக்கு காவல் நிலையம் சென்றுவிட்டேன். நான் காலை 06.30 மணிக்கு காவல் நிலையம் சென்றபோது அங்கு போலீசார் யார் இருந்தது என்றால் திரு.உதயசூரியன் சார்பு ஆய்வாளர் இருந்தார். அவர் சீருடையில் இருந்தாரா என்றால் ஆமாம். உதவிஆய்வாளரிடம் நான் புகார் கொடுத்தபின்பு எத்தனை மணிக்கு சம்பவயிடம் வந்து விசாரித்தார் என்றால் 08.00 மணிக்கு வந்து விசாரித்தார். சம்பவயிடத்தில் விசாரணை நடத்திவிட்டு 08.30 மணிக்கு சார்பு ஆய்வாளர் சென்றிருப்பாரா என்றால் சென்றிருப்பார். அழைத்தபின்பு எங்களை காவல் நிலையம் வரும்மாறு சொல்லிவிட்டு சென்றார். பின்பு காலை 11.00 மணியளவில் எங்களை காவல் நிலையம் வரும்மாறு அழைத்தார், நான் சென்றேன். எனக்கும் செந்தில்குமாருக்கும் இடையேதான் பிரச்சனை எனக்கும் பிரபுக்கும் பிரச்சனை இல்லை என்றால் சரியல்ல. செந்தில் பிரபுக்கு போன் செய்து வரவழைத்து பிரபு வந்து சத்தம் போட்டு பிரச்சனை செய்தார். நான் 06.30 மணிக்கு புகார் கொடுக்கும் போது செந்தில்குமார் மற்றும் பிரபு இருவரின் மீதும் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. செந்தில் குமார் மீது மட்டும் தான் கொடுத்தேன். அதற்குபின்புதான் பிரபை வரவழைத்து பிரச்சனை செய்தார்கள்.

சம்பவ சமயத்தில் பிரபுவின் மனைவி ராணி கடையில் இருந்தாரா என்றால் இருந்தார். மேற்படி 5 கறிக்கடைகளில் 4 கடைகளை நானும், ஒரு கடையை எதிரி பிரபுவின் பராமரிப்பில் அவரது மனைவி ராணியும் செந்தில்குமாரும் நடத்திவருகிறார்கள் என்றால் 2023-ம் வருடத்திற்கு பின்புதான் 4 கடைகளையும் நான் நடத்தி வருகிறேன். சம்பவ சமயத்தில் 1 மற்றும் 5-ம் நம்பர் கடையை மட்டும் தான் நான் நடத்தி வந்தேன். எனக்கும் மற்றவர்களுக்கும் கறிக்கடை காரணமாகத்தான் பிரச்சனை ஏற்பட்டதா என்றால் ஆமாம். சம்பவதினத்தன்று காலை 11.00 மணிக்கு சார்பு ஆய்வாளர் திரு.உதயசூரியன் அழைத்து நான் காவல் நிலையம் சென்றபோது யார் யார் அங்கு இருந்தது என்றால் சார்பு ஆய்வாளர் திரு.உதயசூரியன், திரு.முஜிப் ஏட்டையா மற்றும் 2, 3 போலீசார்கள் இருந்தார்கள். அப்போது அங்கு ஆஜர் எதிரி பிரபு, ராணி, செந்தில் ஆகியோர்களும் இருந்தார்கள். நான் காவல் நிலையம் சென்றபோது பிரபு, ராணி, செந்தில் ஆகியோர்கள் கீழே அமர்ந்திருந்தார்களா, அல்லது நின்றிருந்தார்களா என்றால் நான் போனபோது பிரபு உதயசூரியன் SI யை அடித்து கீழே தள்ளிவிட்டு அவருக்கு முகத்தில் காயம் ஏற்படுத்திவிட்டு அங்கிருந்து ஓடியவரை அங்கிருந்த போலீசார்கள் பிடிக்கமுயன்றார்கள் பிரபு அங்கிருந்து ஓடிவிட்டார். தற்போது சொல்லியது போல தான் முதல் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். பிரபு, ராணி, செந்தில் ஆகியோர்கள் எதற்காக காவல் நிலையம் சென்றது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் காவல் நிலையத்திற்கு செல்லும் போது பிரபு ஓடினாரா என்றால் நான் காவல் நிலையம் படிக்கட்டு ஏறும் போது சண்டை நடந்துகொண்டிருந்தது பிரபு திரு.சார்பு ஆய்வாளர் உதயசூரியனை அடித்து கீழே தள்ளிவிட்டு ஓடியதை நான் நேரில் பார்த்தேன். நான் படிக்கட்டு ஏறும் போது சண்டை நடந்ததை நான் பார்த்தேனா என்றால் ஆமாம். வராண்டாவில் இருந்து சத்தம் போட்டுக்கொண்டிருந்தார்கள். பிரபு என்னை படிக்கட்டு ஏறும் போது பார்த்தார் பார்த்தவுடன் சார்பு ஆய்வாளரை அடித்துவிட்டார். வழக்கு சம்பவம் காவல் நிலையத்திற்குள் நடக்கவில்லை என்றாலும் காவல் நிலையத்திற்கு வெளியேதான் நடந்தது என்றால் காவல் நிலைய வராண்டாவில் நடந்தது. எனக்கும், பிரபு, ராணி, செந்தில் குமார் ஆகியோர்களுக்கும் கறிக்கடை சம்பந்தமா இருந்துவரும் முன்விரோதத்தை மனதில் கொண்டு நான் தவறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல எதிரிக்கும் வழக்கு சம்பவத்திற்கும் சம்பந்தம் அல்ல என்றால் சரியல்ல. எனக்கும் செந்தில் என்பவருக்கும் ஏற்பட்ட பிரச்சனை பிரபு கடையின் உரிமையாளர் என்பதால் என்மீது புகார் கொடுப்பதற்கு காவல் நிலையம் சென்றிருந்தபோது சார்பு ஆய்வாளர் திரு.உதயசூரியன் எனக்கு சாதகமாக பேசி பிரபுவைதான் உதயசூரியன் அடித்துள்ளார் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் நடந்த சம்பவங்கள் CCTV வில் கேமராவில் பதிவாகி இருக்கும் என்றால் பதிவாகி இருக்க வாய்ப்புள்ளது. காவல் நிலைய படிக்கட்டில் இருந்து காவல் நிலைய நுழைவாயிலுக்கு இடைபட்ட தூரம் சுமார் 60 அடி இருக்குமா என்றால் 30 அடி தூரம் இருக்கும்.

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.